ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பெரும்புறக்கடலை ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பெரும்புறக்கடலை ॥

## திருக்கண்ணமங்கை

‡பெரும் புறக் கடலை அடல் ஏற்றினைப்⋆
    பெண்ணை யானை⋆ எண்ணில் முனிவர்க்கருள்
தரும் தவத்தை முத்தின் திரள் கோவையைப்⋆
    பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை⋆
அரும்பினை அலரை அடியேன் மனத்-
    தாசையை⋆ அமுதம் பொதியின் சுவை⋆
கரும்பினைக் கனியைச் சென்று நாடிக்⋆
    கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (10)

மெய்ந் நலத் தவத்தைத் திவத்தைத் தரும்⋆
    மெய்யைப் பொய்யினைக் கையில் ஓர் சங்குடை⋆
மைந் நிறக் கடலைக் கடல் வண்ணனை⋆
    மாலை ஆலிலைப் பள்ளி கொள் மாயனை⋆
நென்னலைப் பகலை இற்றை நாளினை⋆
    நாளையாய் வரும் திங்களை ஆண்டினை⋆
கன்னலைக் கரும்பினிடைத் தேறலைக்⋆
    கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (2)

எங்களுக்கருள் செய்கின்ற ஈசனை⋆
    வாசவார் குழலாள் மலை மங்கை தன்
பங்கனைப்⋆ பங்கில் வைத்துகந்தான் தன்னைப்⋆
    பான்மையைப் பனி மா மதியம் தவழ்⋆
மங்குலைச் சுடரை வட மாமலை
    உச்சியை⋆ நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை⋆ பகலைச் சென்றுநாடிக்⋆
    கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (3)

பேய் முலைத் தலை நஞ்சுண்ட பிள்ளையைத்⋆
தெள்ளியார் வணங்கப்படும் தேவனை⋆
மாயனை மதிள் கோவல் இடைகழி
மைந்தனை⋆ அன்றி அந்தணர் சிந்தையுள்
ஈசனை⋆ இலங்கும் சுடர்ச் சோதியை⋆
எந்தையை எனக்கெய்ப்பினில் வைப்பினை⋆
காசினை மணியைச் சென்று நாடிக்⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (4)

ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை⋆
இம்மையை மறுமைக்கு மருந்தினை⋆
ஆற்றலை அண்டத்தப்புறத்துய்த்திடும்
ஐயனைக்⋆ கையில் ஆழி ஒன்றேந்திய
கூற்றினை⋆ குரு மா மணிக் குன்றினை⋆
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை⋆
காற்றினைப் புனலைச் சென்று நாடிக்⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (5)

துப்பனைத் துரங்கம் படச் சீறிய
தோன்றலைச்⋆ சுடர் வான் கலன் பெய்ததோர்
செப்பினை⋆ திருமங்கை மணாளனைத்⋆
தேவனைத் திகழும் பவளத்தொளி
ஒப்பனை⋆ உலகேழினை ஊழியை⋆
ஆழியேந்திய கையனை அந்தணர்
கற்பினை⋆ கழுநீர் மலரும் வயல்⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (6)

திருத்தனைத் திசை நான்முகன் தந்தையைத்⋆
தேவ தேவனை மூவரில் முன்னிய
விருத்தனை⋆ விளங்கும் சுடர்ச் சோதியை⋆
விண்ணை மண்ணினைக் கண்ணுதல் கூடிய
அருத்தனை⋆ அரியைப் பரி கீறிய
அப்பனை⋆ அப்பிலார் அழலாய் நின்ற

கருத்தனை⋆ களி வண்டறையும் பொழில்⋆
    கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (7)

வெஞ்சினக் களிற்றை விளங்காய் விழக்⋆
    கன்று வீசிய ஈசனை⋆ பேய்மகள்
துஞ்ச நஞ்சு சுவைத்துண்ட தோன்றலைத்⋆
    தோன்றல் வாள் அரக்கன் கெடத் தோன்றிய
நஞ்சினை⋆ அமுதத்தினை நாதனை⋆
    நச்சுவார் உச்சிமேல் நிற்கும் நம்பியை⋆
கஞ்சனைத் துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக்⋆
    கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (8)

பண்ணினைப் பண்ணில் நின்றதோர் பான்மையைப்⋆
    பாலுள் நெய்யினை மால் உருவாய் நின்ற
விண்ணினை⋆ விளங்கும் சுடர்ச் சோதியை⋆
    வேள்வியை விளக்கின் ஒளி தன்னை⋆
மண்ணினை மலையை அலை நீரினை⋆
    மாலை மா மதியை மறையோர் தங்கள்
கண்ணினை⋆ கண்கள் ஆரளவும் நின்று⋆
    கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (9)

‡கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன் என்று⋆
    காதலால் கலிகன்றி உரைசெய்த⋆
வண்ண ஒண் தமிழ் ஒன்பதோடொன்றிவை⋆
    வல்லராய் உரைப்பார் மதியம் தவழ்⋆
விண்ணில் விண்ணவராய் மகிழ்வெய்துவர்⋆
    மெய்ம்மை சொல்லில் வெண் சங்கம் ஒன்றேந்திய
கண்ணா!⋆ நின் தனக்கும் குறிப்பாகில்
    கற்கலாம்⋆ கவியின் பொருள் தானே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥